# *DEPOSITION OF WITNESS*
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## SC No. 232/2023

PW: 3

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.ஜெயில்சிங் | Occupation: | துப்புறவு பணியாளர் |
| Father's Name : | திரு.சோமலிங்கம் | Religion : | இந்து |
| Village : | சுவாமிமலை | Age : | 38 |
| Taluk : | கும்பகோணம் | | |

Solemnly affirmed by Thiru.S.Allan Border, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 14th day of August 2024.

Signature of Witness.

(Accused present. Additional Public Prosecutor Present. Defence counsel present. )

முதல் விசாரணை :

நான் சுவாமிமலையில் வசித்து வருகிறேன். நான் டவுன் பஞ்சாயத்தில் துப்புறவு பணியாளராக வேலை செய்து வருகிறேன். 17.09.2021 அன்று இரவு 9.00 மணிக்கு சம்பவம் மளிகை கடையில் நடந்ததாக கூறினார். ராஜ்குமார் வீட்டில் நாங்கள் இருந்தபோது ராஜ்குமார் வந்து அஜீத் வந்து ஹாரன் அடித்து சண்டை நடந்ததாக கூறினார். மாமாவிடம் கூறினார். நான் போய் அஜீத் வீட்டில் கேட்டுவிட்டு வரேன், அப்பாவிடம் சொல்லிவிட்டு வரேன் என்று கூறினார்.

நாங்கள் கொஞ்சம் லேட்டாகி சவுண்ட் கேட்டது என்று நாங்கள் பின்னால் ஜெயக்குமார் வீட்டிற்கு சென்றோம். அங்கு ஒரே அடிபிடி சண்டையாக இருந்தது. அங்கு இரத்தமாக இருந்தது. தலையில் வெட்டுப்பட்டிருந்தது. கை எல்லாம் ஒரே இரத்தமாக இருந்தது, இரண்டாக தொங்கியது. ஆம்புலன்சிற்கு என் மாமா மகன் போன் செய்து ஆம்புலன்சில் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். அஜீத்குமார், வாசுகி, அய்யப்பன், ஜெயக்குமார் அங்கு இருந்தார்கள். அவர்கள் எங்கள் சொந்தக்காரர்கள் தான். வெட்டியதை நான் பார்க்கவில்லை. நான் ஓடினேன் அவர்கள் சத்தம் போட்டுக் கொண்டு ஓடினார்கள். கும்பகோணம் அரசு மருத்துவமனையில் அவரை சேர்த்தோம். இங்கு பார்க்க முடியாது என்று கூறிவிட்டார்கள். நான் சம்பவ இடத்தில் பார்த்தவர்கள் இன்று நீதிமன்றத்தில் உள்ளார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :

2) எனது வீடு கலைஞர் நகரில் உள்ளது. அங்கிருந்து சம்பவ இடம் 6, 7 கி.மீ தொலைவில் உள்ளது. மாலை 5.00 மணிக்கு எனக்கு வேலை முடிந்து விடும். AVR மருத்துவமனையில் வைத்து சம்பவம் நடந்த 17.09.2021 அன்றே என்னை விசாரணை செய்தார்கள். மணி எனக்கு தெரியவில்லை. சம்பவம் நடக்கும்போதே சத்தம் கேட்டு நாங்கள் சென்று விட்டோம். ராஜ்குமார் சென்ற 10 நிமிடத்தில் எல்லாம் நாங்களும் சென்று விட்டோம். அஜீத்குமார் வீடு வேறொரு தெருவிலும் ராஜ்குமார் வீடு வேறொரு தெருவிலும் உள்ளது. அஜீத்குமார் வீட்டிற்கு தான் ராஜ்குமார் சென்றார். ராஜ்குமார், அஜீத்குமார் வீட்டிற்கு சென்றபோது நாங்கள்

எல்லாம் வீட்டில் தான் இருந்தோம். ராஜ்குமார் மட்டும் தான் சென்றார். அஜீத்குமார் வீட்டை ராஜ்குமார் வீட்டிலிருந்து பார்த்தால் தெரியாது. தெரு தெரியும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இருட்டு நேரம். அஜீத்குமார் வீட்டிற்கு ராஜ்குமார் மட்டும் அந்த நேரத்தில் ஏன் செல்கிறார் என்று நாங்கள் கேட்டோமா என்றால் கேட்டோம். ராஜ்குமார் தான் சென்று சொல்லிவிட்டு வருவதாக கூறிச் சென்றார். ராஜ்குமார் மீது கொலை வழக்கு உட்பட பல வழக்குகள் உள்ளது என்றால் கொலை வழக்கு உள்ளது எனக்கு தெரியும்.

3) நானும் மருத்துவமனைக்கு சென்றேன். இங்கு பார்க்க முடியாது என்று கூறியதால் AVR மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மருத்துவமனையில் அட்மிஷன் போட்டபோது நானும் உடனிருந்தேன். ராஜ்குமாரை அட்மிஷன் போட்டது அவரது தம்பி சசிக்குமார் தான். சம்பவ இடத்தில் அஜீத்குமார், அய்யப்பன், ஜெயக்குமார் ஆகியோர்களுக்கு காயம் ஏற்பட்டு அவர்கள் சிகிச்சையில் இருந்த விவரம் எனக்கு தெரியாது. அஜீத்குமார், அய்யப்பன், ஜெயக்குமார் ஆகியோரை யார் வெட்டினார்கள் என்று எனக்கு தெரியாது, அதனை நான் பார்க்கவும் இல்லை. ராஜ்குமார் வீட்டிலிருந்து வயல்வெளி ஓரமாக சென்று திரும்பி 2, 3 வீடு தள்ளி அஜீத்குமார் வீடு உள்ளது. அஜீத்குமார் வீட்டிற்கு நான் சென்றுள்ளேன். அஜீத்குமார் வீடு உள்ள தெரு முழுவதும் சிமெண்ட் போட்ட தெரு என்றாலும் மண் ரோடு இல்லை என்றாலும் சரிதான்.

4) அஜீத்குமார் வீட்டை சுற்றி எத்தனை வீடுகள் உள்ளது என்றால் ஒரு புறத்தில் தான் வீடுகள் உள்ளது. அஜீத்குமார் வீட்டிற்கு எதிர்புறத்தில் ஒரு தெருவே உள்ளது. சம்பவம் நடந்தபோது எவ்வளவு பேர் அங்கு இருந்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு கூற முடியாது. அந்த இடம் இருட்டாக இருந்ததால் தான் என்னால் குறிப்பிட்டு கூற முடியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிரிகளான ஜெயக்குமார், அஜீத், அய்யப்பன் ஆகியோரை வெட்டியதாக ராஜ்குமார் மீது வழக்கு உள்ளது என்றால் சரிதான். ராஜ்குமார் வீட்டில் யார் யார் இருந்தார்கள் என்றால் என் மாமா வீரையன், அத்தை மகாராணி, சசிக்குமார், சசிக்குமார் மனைவி, நான், என் மனைவியும் இருந்தோம். அஜீத்குமார் வீட்டில் சத்தம் கேட்ட பிறகு நாங்கள் எல்லோரும் அங்கு ஓடினோமா என்றால் ஓடினோம். நான் மேலே கூறிய அனைவரும் ஓடினோம் ஆனால் யார் பின்னால் யார் ஓடினோம் என்று குறிப்பிட்டு கூற முடியாது. ராஜ்குமார் எனது தாய் மாமா மகன். சசிக்குமாரும் எனது தாய் மாமா மகன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் அந்த இடத்தில் நான் இல்லை என்றாலும் சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சம்பவம் பற்றி கேள்விப்பட்டு தான் சென்றேன் என்றாலும் சரியல்ல. என் மாமா மகன் சசிக்குமாருக்கு திருமணம் ஆகியிருந்தது. அதனால் அவரை விருந்திற்கு அழைப்பதற்காக நான் என் மாமா வீட்டிற்கு சென்றிருந்தேன். எனக்கு சசிக்குமாரின் திருமண தேதி ஞாபகம் இல்லை.

5) சம்பவத்திற்கு 15 நாட்களுக்கு முன்பாக திருமணம் நடந்தது. சசிக்குமார் தற்சமயம் அனைக்குடி கிராமத்தில் வசித்து வருகிறார். அனைக்குடி கிராமத்திற்கும் தேனாம்படுகைக்கும் இடையே சுமார் 15 கி.மீ தொலைவு இருக்கும். திருமணத்திற்கு முன்பே பெரும்பாலும் தேனாம்படுகை கிராமத்தில் சசிக்குமார் இருந்ததில்லை என்றால் சரிதான். பெற்றோரை பார்ப்பதற்காக வந்து செல்வார். திருமணம் முடிந்த பிறகு தேனாம்படுகை கிராமத்தில் தான் இருந்தார். திருமணம் முடிந்து மனைவியுடன் அனைக்குடி கிராமத்தில் சசிக்குமார் வசித்து வருகிறார் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பே ராஜ்குமார், சசிக்குமாரும் எதிரி அய்யப்பன் வீட்டில் தங்கியிருந்தார்கள் என்றால் சரிதான். எதிரி அய்யப்பன் வீடு திருப்புறம்பியத்தில் உள்ளது என்றால் சரிதான். திருப்புறம்பியத்திற்கும் தேனாம்படுகைக்கும் சுமார் 8 கி.மீ தொலைவு இருக்கும் என்றால் 12 கி.மீ தொலைவு இருக்கும். எதிரிகளும் எனக்கு உறவினர்கள் தான் ஆனால் ராஜ்குமாரும் சசிக்குமாரும் எனக்கு தாய் மாமா மகன்கள் என்ற முறையில் நெருங்கிய உறவினர்கள். சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாமல் அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது தாய் மாமா மகன்கள் என்பதால் அவர்களுடைய சாட்சியத்தை அனுசரித்து நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6) இந்த எதிரிகளால் அ.சா.1 ராஜ்குமாருக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றாலும், ராஜ்குமார் மற்றும் அவருடைய நண்பர்கள் எதிரியின் வீட்டிற்கு அத்துமீறி ஆயுதங்களுடன் சென்று தாக்கியபோது அவர்கள் வைத்திருந்த

ஆயுதங்களால் அவர்களுக்குள் தாக்கியபோது ஏற்பட்ட காயத்தை எதிரிகளுக்கு எதிராக பயன்படுத்தி அ.சா.1 பொய்யாக சொல்லிய சாட்சியத்தை அனுசரித்து எனக்கு தெரியாது சம்பவத்தை தெரிந்தது போல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

D SHANMUGA PRIYA
Digitally signed by D SHANMUGA PRIYA
Date: 2024.08.14 17:04:12 +0530

*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam.*